# வழிபாடு

- பூஜையின் வகைகள் - 2 அவை ஆத்மார்த்தம், பரார்த்தம்.
- ஆத்மார்த்தம் - தன்பொருட்டு பூஜை செய்தல்.
- பரார்த்தம் - பிறர் பொருட்டு பூஜை செய்தல்.
- பரார்த்தம் (அ) சமயவழிபாடு
  1) நித்தியம்
  2) நைமித்திகம்
  3) காமிகம் என மூவகைப்படும்,
- அன்றாடம் மாறாமல் செய்துவரும் சமயவழிபாட்டு பூஜை - நித்தியம்.
- விசேட காலங்களில் செய்யப்படும் சிறப்பு வழிபாடு - நைமித்திகம்.
- சிற்சில பயன்களை கருதி நூல்களில் விதித்தப்படி அவ்வப்போது செய்யப்படும் வழிபாடு - காமிகம்.
- நிர்பீசதீக்கை பெற்றவர் - நித்திய வழிபாடு ஒன்றிற்கே உரியவர்.
- சபீசதீக்கை பெற்றவர் அனைத்து வித வழிபாடு செய்வதற்குரியவர்.
- ஜீவன் முத்தவர்கள் - ஜீவனோடு இறைவன் திருவருளை நுகர்ந்து இவ்வுலகில் வாழ்பவர்கள்.
- இவர்களிடம் மும்மலமழிந்தும் அதனை எஞ்சிய வாசனைமலம் இருக்கும், எ.கா,. விசுவாமித்திரர், காசிபமுனிவர்,
- வாசனை மலம் நீங்க - அடிகளார்களையும், ஆலயங்களையும் இறைவனாக கருதி வழிபட வேண்டும்.

------****-----****----